# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**மனு எண். 178/நகராட்சி/2018**
**நாள் : 12/04/2019**

திரு R. சந்திரசேகரன்,
**திண்டிவனம்** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**திண்டிவனம் நகராட்சி,** – **எதிர் மனுதாரர்**
**திண்டிவனம்.**

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், கே.டி.ஆர். நகர். எண்.7/18, இரண்டாவது தெரு முகவரியில் வசிக்கும் திரு R. சந்திரசேகரன் அவர்களின் 27.07.2018 நாளிட்ட மனு; தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு முகவரியிட்டு அதன் நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்த விவரங்கள் சொத்துவரி சம்பந்தப்பட்டதாக இருந்ததால், அம்மனு முறைமீடாகப் பதிவு செய்யப்பட்டு, 178/2018 என்ற முறையீட்டு எண் வழங்கப்பட்டு திண்டிவனம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. அவ்வறிக்கை மற்றும் விசாரணையின் போது நகராட்சி ஆணையர் அளித்த விவரங்கள் பரிசீலிக்கப்பட்டுக் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், கே.டி.ஆர். நகர். எண்.7/18, இரண்டாவது தெரு முகவரியில் வசிக்கும் திரு R. சந்திரசேகரன் என்பவர், திண்டிவனம் நகராட்சியில் நபர்களுக்கு ஏற்றாற்போல் சொத்துவரி விதிப்பு செய்துள்ளதாகவும், கையூட்டிற்கு ஏற்றவாறு வீட்டின் அளவைக் குறைத்து தவறான வரி விதிப்பை செய்த நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தனது மனுவில் தெரிவித்திருந்தார்.

2. மனுதாரரின் முறையீடு குறித்து, நகராட்சி ஆணையரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு விளக்கம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரரிடமிருந்து இதுவரை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 13 மனுக்களுக்கு மேல் பெறப்பட்டு மனுதாரருக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளதென்றும், இவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைத் தவறாகப் பயன் படுத்தி புகார்மனு எழுதும் வழக்கத்தினைக் கொண்டுள்ளார் என்றும் விசாரணையின் போது

தெரிவிக்கப்பட்டது. மனுதாரரின் வீட்டிற்கு விதிகளின்படியே வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதென்றும், அதனைக் குறைக்கவேண்டும் என்ற எண்ணத்திலேயே இதுபோன்று மனு எழுதுகிறார் என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. மேலும், மனுதாரரால் சாலையை ஆக்கிரமித்து வீட்டின் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருந்தது என்றும், 2013–ஆம் ஆண்டில் அவ்வாக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்றும் ஆணையர் தெரிவித்தார். ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட ஆண்டிலிருந்து நகராட்சிக்கு எதிராகப் புகார் செய்யும் பணியினை மேற்கொண்டு வருகிறார் என்றும், 2007–08–ஆம் ஆண்டிலிருந்து மனுதாரரின் வீட்டிற்கு சொத்துவரி செலுத்தப்படாமல் ரூ. 44,524/– நிலுவை உள்ளது என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. நகராட்சி ஆணையரின் அறிக்கையிலும் மேற்குறிப்பிட்ட விவரங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

3. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சொத்து வரி விதிப்பு விவரங்களைக் கோரி தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு மனுச் செய்துள்ளார். சொத்து வரி விதிப்பு விவரங்களை கோரும் முறையீட்டு மனுதாரர் தனது வீட்டிற்கான சொத்து வரி 2007–08–ஆம் ஆண்டிலிருந்து நடப்பு நிதிஆண்டு வரை செலுத்தப்படாமல் ரூ. 44,524/– நிலுவை வைத்துள்ளதாக அறியமுடிகிறது.

(1) மனுதாரர் உரிய விதிகளின் படி உரிய படிவத்தில் மனு செய்யவில்லை.

(2) மனு தகவல் ஆணையருக்கு முகவரியிடப்பட்டுள்ளது.

(3) மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களின் அடிப்படையில் மனு தள்ளுபடி செய்யப்படுகின்றது. சொத்துவரி நிலுவையை வசூலிக்க ஆணையாளர் உரிய உருப்படியான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 12–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

நகராட்சி ஆணையர்,
திண்டிவனம் நகராட்சி,
திண்டிவனம்,
விழுப்புரம் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி